**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிறுவனம் - ஆடுதுறை**

**திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(02.07.2024 முதல் 06.07.2025)**

**அறிக்கை எண் 26/2025** **தேதி. 01.07.2025**

**தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை**

தஞ்சாவூர் மாவட்டத்தின் 27.06.2025 முதல் 30.07.2025 வரையிலும் பகல் நேரவெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 23 - 29 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 73 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 67 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4 - 5 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென் தென் மேற்கு திசை வரை பதிவானது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை தஞ்சாவூர் (02.07.2025 முதல் 06.07.2025)**

| கடந்த வார வானிலை 27.06.2025 மற்றும் 30.06.2025) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 06.07.2025- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/06 | நாள்-2 28/06 | நாள்-3 29/06 | நாள்-4 30/06 | தேதி | நாள்-1 02/07 | நாள்-2 03/07 | நாள்-3 04/07 | நாள்-4 05/07 | நாள்-5 06/07 |
| 0.6 | 3.8 | 4.9 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 1 | 3 | 2 | 1 |
| 38 | 38 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 38 | 38 | 38 | 39 | 39 |
| 29 | 23 | 29 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 29 | 29 | 29 | 29 | 29 |
| 5 | 5 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 73 | 73 | 70 | 72 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 75 | 75 | 75 | 70 | 70 |
| 67 | 63 | 60 | 60 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 60 | 60 |
| 5 | 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 18 | 18 | 18 | 16 | 16 |
| தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | காற்றுவீசும் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் தென் மேற்கு |

**தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 03.07.2025 முதல் 06.07.2025 ஆகிய தினங்களுக்கு இலேசான தூரல் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 16 - 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

| | |
|---|---|
| **பொது** | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். |

| | | |
|---|---|---|
| **நெல்** | **நாற்றாங்கால்** <br> **.** | குறுவை நாற்றாங்காலில் குலைநோயின் ஆரம்ப அறிகுறிகள் முதலில் கருப்பு நிற எள் வடிவத்தில் தென்படும். அப்படி தென்பட்டால் 1 லிட்டர் தண்ணீருக்கு ½ கிராம் என்ற அளவில் கார்பன்டெசிம் மருந்தை கலந்து மாலை வேலையில் தெளிக்கவும். |
| **நெல்** | **நடவு வயல்** | கோடை மற்றும் முன் குறுவை நெற்பயிரில் இலை சிலந்தியின் தாக்கம் காணப்படுகிறது. இதனை கட்டுப்படுத்த டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லது பெனாஷாகுயின் 10 EC 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும் அல்லது ஸ்பைரோமெசிபென் 22.9 SC 1.2 மி.லி. / லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் |
| **வாழை** | | வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| **கால்நடைகளுக்கு** | **மாடு** | வெப்பநிலை அதிகரிப்பதால் கொட்டகையின் மேற்கூரையின் மீது தென்னங்கீற்று அல்லது வைக்கோல் பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்ப தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |
| | | காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். ஏனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும்.

**இயக்குநர்**